உ

சிவமயம்.

ஸ்ரீ தோடகாசார்யர் வடமொழியிலியற்றிய

ஸ்ரீ சங்கரகுரு அஷ்டகம்.

இஃது

திருவண்ணுமலை ஈசானிய மடம்

ஸ்ரீ நடேச ஞானதேசிக சுவாமியவர்களால்

மொழிபெயர்க்கப்பட்டது.

சிதம்பரம் கோ சித. மடாலய வெளியீடு.

ஸ்ரீ சங்கரகுரு அஷ்டகம்.

வெண்பா

படித்தறிந்த நூலனைத்தாம் பாற்கடலே வேதந்
தொடுத்தபொருட் செல்வமே தூய்தா—மடிப்பூ
தனைக்குறிக்கொண் டேனுளத்திற் சங்கரப்பே ரைய
வெனக்குப் புகலா யிரு.

இதன் பொருள்:— அறியப்பட்ட சர்வசாஸ்திர ரூப அமிர்த சமுத்திரத்தையுடையவரே மகத்தாகிய உபநிஷதங்களால் பிரதிபாதிக்கப்பட்ட அர்த்தமாகிய நிதியையுடையவரே (தங்களுடைய) நிருமலமாகிய திருவடிகளை (நான் என்) ஹிருதயத்தில் தியானஞ் செய்கின்றேன் ஹேசங்கர தேசிக (தாங்கள்) எனக்கு அடைக்கலம் ஆவீராக. (1)

வெள்ளமா நூலை விரித்தவுண்மை யாணையுளோய்
கள்ளப் பிறவிக் கடலில்வருந்—துள்ளத்

தனைக்கா வருட்கடலே சங்கரப்பே ரைய
வெனக்குப் புகலா யிரு.

(இ—ள்.) கிருபாசமுத்திரமே செய்யப்பட்ட சர்வ சாஸ்திரங்களின் தத்துவ விதியை (உண்மை ஆணையை) உடையவரே சம்சாரசமுத்திர துக்கத்தால் துக்கிதமான ஹிருதயத்தோடு கூடிய என்னை இரக்ஷிப்பீராக. ஹேசங் கரதேசிக (தாங்கள்) எனக்கு அடைக்கலம் ஆவீராக. (௮) ௯

தன்னறிவி னாராய்விற் றக்க திருவுளத்தோய்
நின்னாலே நல்லோனாய் நிற்பனரன்—முன்னேன்
றனக்குளஞா னத்தையருள் சங்கரப்பே ரைய
வெனக்குப் புகலா யிரு.

(இ—ள்.) ஆத்மஞான விசாரணையில் அழகிய புத்தியையுடையவரே தங்களால் ஜனங்கள் நல்லோர் களாக ஆவார்கள் (தாங்கள்) ஈஸ்வரஜீவர்களின் விவேக

ஞானத்தை அருள்செய்வீராக. ஹே சங்கரதேசிக(தாங்கள்) எனக்கு அடைக்கலம் ஆவீராக. (3)

சிவனேதா னென்றெனது சித்தத்தி லன்பு
தவநன்ரு யுண்டாயிற் றன்றே—பவவா
தனைக்கடலை நீக்குகிற்பாய் சங்கரப்பே ரைய
வெனக்குப் புகலா யிரு.

(இ—ள்.) தாங்கள் சாக்ஷாத் சிவசொருபமே என்று என்னுடைய சித்தத்தில் சந்தோஷத் தன்மையானது நிரந்தரம் உண்டாயிற்று (தாங்கள்) என்னுடைய மஹாமோஹசமுத்திரத்தை நிவிர்த்திப்பீராக. ஹே சங்கரதேசிக (தாங்கள்) எனக்கு அடைக்கலம் ஆவீராக. (4)

நின்னடிநற் காட்சிநசை நீண்டபெரும் புண்ணியங்கள்
முன்னமிழைத் தோர்க்கே முளைக்குமா—லின்ன

றனக்கிடனு மென்னைக் சங்கரப்பே ரைய
வெனக்குப் புகலா யிரு.

(இ—ள்.) தங்களுடைய திருவடி தரிசனத்தில் பிரிய மானது அநேக பிரகாரமான சுகிருதங்கள் செய்யப்பட்டிருப்பின் உண்டாகும் மிகுந்த துக்கியாகிய இந்தவென்னை (தாங்கள்) இரக்ஷிப்பீராக. ஹே சங்கரதேசிக (தாங்கள்) எனக்கு அடைக்கலம் ஆவீராக. (5)

௬

பெரியா ருலகோம்பப் பெற்றாராய் மேனி
சரியாகின் ரூர்மறைவாத் தானே—தரையாந்
தனக்கிரவி போலொளிர்வாய் சங்கரப்பே ரைய
வெனக்குப் புகலா யிரு.

(இ—ள்.) மஹாத்மாக்கள் ஜகத்தை இரக்ஷிக்கும் பொருட்டுத் தரிக்கப்பட்ட திருவுருவத்தை யுடையவர்

களாய் வியாஜமாக (மறைவு வடிவமாக) சஞ்சரிக்கிறார்கள் ஹே சங்கரகுரோ (தாங்கள்) இந்த லோகத்தில் சூரியனைப் போல (பிரசித்தமாக ஜகத்குருவென்று) விளங்குகின்றீர். ஹே சங்கரதேசிக (தாங்கள்) எனக்கு அடைக்கலம் ஆவீராக (6)

சூரவர் பெரும கொடியேறு கொண்டோய்
சரணடைந்தார் மெய்ப்பொருளே சார்பே—புரவோர்
தனக்கொப் பெவருமிலாச் சங்கரப்பே ரைய
வெனக்குப் புகலா யிரு.

(இ—ள்.) தேசிகர் தலைவ இடபக்கொடியையுடையவரே சரணமாக அடைந்தவர்களிடத்துப் பிரியமுடையவரே தத்துவமாகிய நிதியையுடையவரே தங்களுக்குச் சமத்தன்மை அடைந்த ஒரு நல்ல புத்திமானுமில்லை. ஹே சங்கரதேசிக (தாங்கள்) எனக்கு அடைக்கலம் ஆவீராக (7)

கலையொன்றுங் கல்லேன் கசடறப் பொன்னென்று
மிலையியல்பா நின்கருணை யெந்தாய்—புலையேன்
றனக்கருளல் வேண்டுமின்றே சங்கரப்பே ரைய
வெனக்குப் புகலா யிரு.

(இ—ள்.) ஹே குரோ என்னால் ஒரு சாஸ்திரமுங்கூட கசடற அறியப்படவில்லை சொல்ப தனமுங்கூட இல்லை தங்களுடைய சஹஜமாகிய கிருபையை அதிசீக்கிரமாகவே இப்பொழுதே எனக்குத் தந்தருள்வீராக. ஹே சங்கரதேசிக (தாங்கள்) எனக்கு அடைக்கலம் ஆவீராக. (8)

ஸ்ரீ சங்கரகுரு அஷ்டகம் முற்றுப்பெற்றது.

பாண்டியன் அச்சகம், சிதம்பரம் '53

உ

சிவமயம்.



சிருங்ககிரி

ஸ்ரீ ஆதிசங்கரகுரு.